மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு பிப்ரவரி 28.02.2020 ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். மகாராஜன்,**
**தனி அலுவலர்.**

1. இந்நகராட்சியில் குடிநீர்நிதி 2019–2020–ம் ஆண்டிற்கு வார்டு 28 தனலட்சுமி நகர், மூப்பனார் நகர், வெங்கட்டா நகர், வார்டு – 26 ராஜேஸ்வரி நகர், பிருந்தாவனம் நகர், வார்டு 11, கடலூர் சாலை அம்மா அறக்கட்டளை முதல் அசோக் நகர் சந்திப்பு வரை பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 490 நாள். 31.01.2020–ல் அனுமதி வழங்க உள்ளதற்கு இணங்க 19.02.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. வி.சுரேஷ்பாபு | 9.80 | 1.31% அதிகம் |
| 2. | திரு. என்.ஆர்.முருகன் | 9.80 | 0.29% குறைவு |

அலுவலக குறிப்பு : **1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. என்.ஆர். முருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.29%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 90/2020/இ2**

2 இந்நகராட்சியில் குடிநீர்நிதி 2019–2020–ம் ஆண்டிற்கு வார்டு 28 முத்தையா நகர், வார்டு 18 லிங்க் ரோடு, லட்சுமிபதி நகர், மேற்குபுற தெரு, வார்டு–01 ராமன் லட்சுமணன் நகர், வார்டு 17 வரதராஜபுரம், வார்டு 10, ஜெயப்பிரியா நகர், வார்டு 19, வி.எஸ்.பி. நகர் (ஜான்டூயி பள்ளி பின்புறம்) வார்டு 27, சீலக்காரத் தெரு மற்றும் வார்டு 33 ஐஸ்வர்யா நகர் பகுதிகளில் பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 489 நாள். 31.01.2020–ல் அனுமதி வழங்க உள்ளதற்கு இணங்க 19.02.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. வி.சுரேஷ்பாபு | 7.00 | 1.31% அதிகம் |
| 2. | திரு. என்.ஆர்.முருகன் | 7.00 | 0.29% குறைவு |

அலுவலக குறிப்பு : **1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. என்.ஆர். முருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.29%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 90/2020/இ2**

3.பண்ணுருட்டி நகராசியின் 2019–20ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2020–2021–ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 261 / 2020/ பி1**

4. பண்ணுருட்டி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன எண். TN31 AH 7374க்கு உரிய சர்வீஸ் செய்ய வேண்டி ஈப்பு வாகன ஓட்டுனர் விண்ணப்பம் அளித்துள்ளார். அதில் என்ஜின் ஆயில், ஆயில் பில்டர், பியூல் பில்டர், ஏர் பில்டர், கூலண்ட் ஆயில், கீர் ஆயில், கிரவுன் ஆயில், பிரேக் ஆயில், முன்வீல் பேரிங், பின்வீல் பேரிங், பிரேக் ஷு, வீல் சிலிண்டர், பிரேக் டிரம் மற்றும் இதர சிறு, சிறு பழுதுகளை சீர் செய்ய வேண்டியுள்ளதால் இதற்கான செலவாகும் தோராய செரிவினமாக மகேந்திரா First Choice SR Car Care சிதம்பரம் நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி ரூ. **66,214/–** (ரூபாய் அறுபதாயிரத்து இருநூற்று பதினான்கு) மட்டும் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட ஈப்பு வாகனத்தை சீர்செய்ய நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 0343 / 2020/இ1**

5. பண்ணுருட்டி நகராட்சிக்கு TN31 AH 7374 எண்ணிட்ட ஈப்பு வாகனத்தின் நான்கு டயர்களும் மிகவும் தேய்ந்து போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதாலும், தொடர்ந்து அரசு பணிகள் மற்றும் பணிகள் சார்ந்த கூட்டத்திற்கு சென்னை மற்றும் கடலூர் அடிக்கடிெ சல்ல வேண்டியுள்ளதாலும், மேற்கண்ட ஈப்பு வாகனத்திற்கு நான்கு டயர்கள் புதியதாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளதாலும், உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகளின் அடிப்படையில் உத்தேச செலவினம் தோராயமாக ரூ.30,000/–ம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட ஈப்பு வாகனத்திற்கு நான்கு புதிய டயர்கள் மாற்ற நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 0354 / 2020/ இ1**

6. பண்ணுருட்டி நகராட்சி ஈப்பு வாகனம் புதியதாக பேட்டரி வாங்கி பொருத்துதல் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்திற்கு சொந்தமான TN31 D9748 ஈப்பு வாகனம் பழுதடைந்து சிலகாலம் பணிமனையில் பழுது நீக்கம் செய்ய நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது பணிகள் முடிந்து தயார் நிலையில் உள்ளது. மேற்கண்ட ஈப்பு வாகனத்தை இயக்க புதியதாக பேட்டரி பொருத்தினால்தான் இயக்க முடியும் என பணிமனையின் மெக்கானிக் கூறியுள்ளார். எனவே, மேற்கண்ட வாகனத்திற்கு உரிய பேட்டரி வாங்கி பொருத்துவதற்கு **17.02.2020**ல் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம்.

| வ. எண் | உள்ளூர் நிறுவனங்களின் பெயர் | விலைப்புள்ளி விவரம் ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீசாய்ராம் பேட்டரி, **36**பி, கும்பகோணம் ரோடு, பண்ருட்டி லிங்க் ரோடு ரவுண்டானா, (எதிர்புறம்) | ரூ. **5,500/–** |
| 2 | M/s. KB பேட்டரி சென்டர், பி.என்.பாளையம், கடலூர் மெயின் ரோடு, மேல்பட்டாம்பாக்கம். | ரூ. **5750/–** |
| 3 | M/s. ஸ்ரீதுர்கா பேட்டரி ஒர்க்ஸ், மாளிகைமேடு, பண்ருட்டி வட்டம். | ரூ. **5800/–** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் வரிசை எண்.**1**ல் கண்டுள்ள ஸ்ரீசாய்ராம் பேட்டரி, பண்ருட்டி நிறுவனம் ரூ. **5500/–** குறைவாக அளித்துள்ளதை நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம்.

**கோ.எண். 0308 / 2020/ இ1**

7. ஆணையர் (பொ) அவர்களின் ஜனவரி **2020**ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்

8. நகராட்சி நிர்வாக ஆணையர், எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 நகராட்சிகளுக்கு மட்டு. தனியாக சொந்த கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளதின் பேரில் புதியதாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதில் கூடுதல் கட்டிடம் மற்றும் இதர செலவினங்களுக்கு பண்ருட்டி முதல்நிலை நகராட்சிக்கான பங்கு தொகை 4வது தவணைத் தொகை ரூ. 3.00 லட்சம் செலுத்துவதற்கு மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1.** வருவாய் நிதியிலிருந்து செலவிட **மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 8319 / 2014/ பி1**

9. பண்ருட்டி நகராட்சியில் பிரிண்டரில் பயன்படுத்தப்படும் ரீபில் செய்த டோனர் 30 எண்ணிக்கையையும், வசூல் மையத்தில் ரசீது அச்சடிக்க பயன்படும் TVS Cadridge 20 எண்ணிக்கையையும் புதியதாக வாங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ. 33,000/–க்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1.** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள **மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண்.**

10. பண்ணுருட்டி நகராட்சி அலுவலக பின்புறமுள்ள 110KVA ஜெனரேட்டர் இயக்குவதற்குரிய இரண்டு பேட்டரிகளும் பழுதடைந்து பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லை. தற்பொழுது மின்தடை ஏற்படும்போது பேட்டரி இல்லாததால் மின் மோட்டார் இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்களின் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீரின் அவசர அவசியம் கருதி 12 volt பேட்டரி 2 எண்கள் பெறுவதற்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதில் குறைந்த விலைப்புள்ளியான ரூ. 23,000/–க்கு குடிநீர் அத்தியாவசியம் கருதி பிரிவு 15ன்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1. மன்றம் பதிவு செய்யலாம்**

**கோ.எண். /2020/இ1**

11. பண்ணுருட்டி நகராட்சி வார்டு எண்.07 மாரியம்மன் கோவில் அருகில் சிறு மின்விசை பம்பு 1.50 எச்.பி. (Mini Power Pump) HDPE தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மின் மோட்டார் பழுதடைந்துள்ளதை பரிசோதனை செய்யும்போது காயில், ஆர்மெச்சூர், பம்பு புஷ் மற்றும் ஸ்டார்ட்டர் பழுதடைந்துள்ளது தெரிய வருகிறது. இதனை சரிசெய்ய கால அவகாசம் கூடுதலாவதோடு பழுது பார்க்கும் செலவினம் கூடுதலாகிறது. அதனை தவிர்க்கும் பொருட்டு, பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி உடனடியாக மேற்கண்ட இடத்திற்கு புதியதாக 1.5 HP நீர்மூழ்கி மோட்டார் மற்றும் ஸ்டார்ட்டர் வாங்கி பொருத்த விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதில் குறைந்த விலைப்புள்ளியான ரூ.22,000/–க்கு குடிநீர் அத்தியாவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1. மன்றம் பதிவு செய்யலாம்**

**கோ.எண். /2020/இ1**

12. நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சி பகுதியில் அமையப் பெற்றுள்ள சமுதாய கழிப்பறைகள் 'அன்னை தெரசா சுயஉதவிக்குழு' மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நச்சுத்தொட்டி (Septic tank) அவ்வப்போது நிரம்பிவிடுகிறது எனவும் பொதுமக்கள் பயன்படுத்த இயலவில்லை என்று கோரியதின்பேரில் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டு நச்சுத்தொட்டி நிரம்பியுள்ளதை உறுதி செய்யப்பட்டது. நச்சுத் தொட்டியை சுத்தம் செய்யும் வாகனம் இல்லாதக் காரணத்தினால் நிரம்பியுள்ள நச்சுத்தொட்டிகளை சுத்தம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் பொதுசுகாதாரம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதார நலன்கருதியும் பொதுமக்களின் அவசர அவசியம் கருதியும் தனியார் வாகனம் மூலம் இப்பணியினை மேற்கொள்ள ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 1251/2019/எச்1**

13. பண்ணுருட்டி நகராட்சி, தமிழ்முரசு நாளிதழ் விளம்பரம் பண்ணுருட்டி நகராட்சியில் கடந்த 2017–18ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் குறித்த இரண்டாண்டு கால சாதனைகளை கால் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பாண்டிச்சேரி நிறுவனம் மூலம் 'தமிழ் முரசு' நாளிதழில் நாள். 17.10.18ல் விளம்பரம் செய்யப்பட்டு இதற்கான பட்டியல் கேட்டு பட்டியல் எண். 3300112523 பட்டியல் நாள். 17.10.18–ல் ரூ. 7560/–ஐ கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. இப்பட்டியல் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 0358/2020/இ1**

14. இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2019–2020–ம் ஆண்டிற்கு செலுத்தப்படும் புதிய மருத்துவ காப்பீட்டு தொகை ரூ. 3,46,553/– மட்டும் கடலூர் புதிய காப்பீட்டு திட்டத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 7252/2017/டி1**

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 28–02–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
பண்ணுருட்டி நகராட்சி.